RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2224s165

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# சிலப்பதிகாரத்தில் யாழ் இசைக்கருவிகளின் பயன்பாடுகள்

**சி. மதியழகி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Harp Instruments in Silapathikaram

**C. Mathiazahi** [a, *]

[a] Department of Tamil, Padmavani College of Arts and Science for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: mak17c@gmail.com

Received: 03-07-2022
Revised: 17-09-2022
Accepted: 10-10-2022
Published: 12-12-2022

Check for updates

**ABSTRACT**

Silapathikaramm is the first text in Tamil literature. It is a very famous epic by Ilango Adigal. This epic is a cultural story based on the Tamil tradition and the story centers around an anklet. Ilango Adigal has used an ordinary couple, Kannaki and her husband Kovalan. In this text harp music is given importance. During the festive seasons the town of Bukhar is filled with songs and music. The author has explained about the seven types of musical instruments. In the text Madhavi was taught to play the harp by a musician. Madhavi learned it effectively and systematically. The text praises the merits of musical instruments. Tamil Vidu Toothu, a Tamil text states that with the help of five musical instruments such as tholkaruvi, thulaikaruvi, kanjakaruvi, narambukaruvi and midatrukaruvi 103 musical varieties are formed. Harp instruments are made using bamboo, sandal wood, charcoal, ebony and bronze. Thus, the article gives a clear information about the harp instrument.

**Keywords:** Silapathikaramm, Ilango Adigal, Musical Instruments, Harp Instrument.

## முன்னுரை

தமிழில் தோன்றிய முதற்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூல் காப்பியங்களில் தனிச்சிறப்பிடம் பெற்றுள்ளது. சிலப்பதிகாரம் தமிழர்களின் பண்பாட்டினை விளக்கும் காலக்கண்ணாடிப் என்று கூறலாம். கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோரின் கதைகளை மட்டும் கூறிச் செல்லாமல், தமிழர்களின் பண்பாடுகளை விளக்கும் பான்மையில் அமைந்துள்ளது. சங்க இலக்கியங்களிலும் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுகின்றன. சிலம்பின் மூலக்கதையானது சங்க இலக்கிய காலத்தில் நிலவிய ஒரு பழங்கதையின் வளர்ச்சிநிலை எனலாம். இக்காப்பியம், தமிழ் மரபைச் சார்ந்த ஒரு பண்பாட்டுக் கதையே, சிலம்பின் மூலக்கதை ஆகும். பழங்காலத்தில் காப்பியங்கள் அரச குடும்பத்தினரைத் தலைவராகப் போற்றியக் காலத்தில் இளங்கோவடிகள், வணிகர் குடும்பத்தினரைச் சார்ந்த கோவலன் கண்ணகியைக் காப்பியத்தில் சிறப்பித்துள்ளார். சமுதாயத்தினரால் ஒதுக்கப்படும் கணிகையர் குலத்தில் பிறந்த மாதவியைப் போற்றி சிறப்பிக்கப்பட்டது. கோவலன், கண்ணகியின் முழுக்கதையைக் கூறும் ஒரு பெருநூலாக ஒளிர்கிறது சிலப்பதிகாரம். காலில் அணியும் சிலம்பினையே காப்பியத் தலைப்பாகக் கொண்டது.

## நாட்டுப்புற அமைப்பில் சிலம்பு

தமிழர் போற்றி வளர்த்த கலைகளில் சிறந்தது நாட்டுப்புறக்கலைகள். இக்கலைகள் செவி வழியாகக் கேட்டு அறிந்த உண்மைகளை வழிவழியாக சிறப்பிடம் பெறுகின்றது. இக்கலைகளில்

சிறப்பிடம் பெறுவது கூத்து. இசைக் கலையோடு இணைந்து வளர்த்த கலை இதுவாகும். இக்கலை ஆடவர் பெண்டிர் இரு சாரார்க்கும் பொதுவாகும். விழாக்காலங்களின் போது கூத்தர்கள் மக்களைத் தம் ஆடல் பாடல்களால் மகிழ்வித்தனர். மக்களும் மன்னர்களும் கூத்தர்களைப் பேணினர். சிலப்பதிகாரத்தில் குரவை கூத்திலும், ஆய்ச்சியர் குரவையிலும் நாட்டுப்புறத்தாக்கம் இடம்பெறுகின்றது என்ற செய்தியை அறியமுடிகிறது.

தொல்காப்பியர் 'பண்ணத்தி' என்ற இசை ஒன்றைத் தொல்காப்பிய ஒன்றின் இலக்கணத்தில் கூறுகிறார்.

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்

பாட்டின் இயல பண்ணத் திய்யே"

இதற்குப் பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செயல்படுவன 'பண்ணத்தி' பற்றி உரையாசிரியர் கூறியுள்ளார் (Gowmarishwari, 2004). இசைநூலின் பாவினங்களைப் பாட்டில் கலந்த பொருளைத் தொல்காப்பியம் எடுத்துக் கூறுகிறது. பாட்டு என்றாலே இசையோடு கூடியது.

இசைக்கு மயங்காதவர்கள் யாரும் இல்லை என்ற கருத்து தொல்காப்பியம் காலம் முதல் இக்கால வரை, மக்களின் மனதில் பதிந்துள்ளது.

"குழலினிது யாழினது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்"

குழலிசை இனிது என்று சொல்லுபவர் தம் குழந்தைகளையுடைமழலைச் சொற்களைக் குழலின் ஓசைக்கும் யாழின் ஓசைக்கும் இணையாக வைத்து வள்ளுவர் கூறுவது நோக்கற்பாலானது (Gowmarishwari, 2014).

## இன்னிசை அரங்கு

இன்னிசை அமைவதற்கு அரங்கு ஒரு முக்கிய காரணமாகும். சிலப்பதிகாரத்தில் கண்ணைக் கவரும் கூத்தினை நிகழ்த்துவதற்குக் கூத்தர்களும், பண்ணோடு யாழ் மீட்டிப் பாடுவதற்குப் புலவர்களும், பரிசில் பெறப் பாடல் பாடிவரும் பாணர்களும் இன்னிசை முழக்கம் பெற, சொல்லில் அடங்காத இன்னிசை நிகழ்ச்சிகள் நடந்தன. இரவு பகலாக இசை நிகழ்ச்சிகள் நடப்பதால் மத்தள ஒலிகள் புகார் நகர் முழுவதும் விழா கோளத்தில் காணப்பட்டதாக சிலப்பதிகாரம் கூறுகிறது.

"கண்ணுளாளர் கருவிக்குயிலுவர்

பண் யாழ்ப் புலவர் பாடல் பாணரொடு

எண் அரும் சிறப்பின் இசை சிறந்து ஒருபால்

முழவுக் கண் துயிலாது முழுக்களும் வீதியும்

விழவுக் களி சிறந்த வியலுள் ஆங்கண்"

இவ்வரிகளின் மூலம் இன்னிசை அரங்கு நிகழ்ச்சி முறைகளை அறியமுடிகிறது (Manikkavasagar, 1998).

## யாழிசை வல்லவன்

ஏழு சுரங்களையும், ஏழு இசையையும் விளக்கிக் கூறியுள்ளார் இளங்கோவடிகள் யாழின் இசை நரம்புகளை மீட்டி இசை எழுப்பும் முறைகளையும் அதனின்று பாடப்படும் பல்வேறு வகைப் பண்களின் நுட்பம் பற்றி விளக்குகிறார் ஆசிரியர்.

பண் குறைவுபடாமல், எல்லாம் சீராகவும் செப்பமாகவும் அமைந்து இருக்கும்படி யாழ் நரம்புகளைப் பிணைத்து இணைத்து இன்னிசை மீட்ட யாழ்இசை வல்லான் ஒருவன் மாதவிக்கு யாழிசை கற்றுத்தந்தான்.

"யாழ் மேல் பாலை இடமுறை மெலியக்

குழல் மேல் கோடி வலமுறை மெலிய

வலிவும் மெலிவும் சமனும் எல்லாம்

பொலியக் கோத்த புலமையோன் வின்"

இவ்வரிகளின் மூலம் மாதவி யாழ் இசையைத் திறம்பட கற்றுக் கொண்ட முறையினை அறியமுடிகிறது (Manikkavasagar, 1998).

"பண்-யாழ்க் கரணமும், படைப் பாடலும்,

தண்ணுமைக் கருவியும், தாழ்தீம் குழலும்"

மணிமேகலை - ஊர் அலர் உரைத்த காதையில் யாழின் செயல்களும், வேய்க் குழலின் இசையும் உணரமுடிகிறது (Thandapani Durai, 2005).

## இசைக்கருவிகள்

மனிதர்களின் பொழுது போக்கிற்காக தோன்றியவையே கலைகள். தனது எண்ணங்களை அடுத்தவருக்குத் தெரியப் படுத்த சுவரில் கிறுக்க ஆரம்பித்து, அது வளர்ச்சியடைந்து ஓவியமானது. சிறிது சிறிதாகப் பேசக் கற்றுக் கொண்ட மனிதன். பாடல்கள் அமைத்து, அதற்கேற்ப இயற்கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு இசைக் கருவிகளை அமைத்துக் கொண்டான்.

"எண்கருவி ஐந்து ஈன்றிடு நூற்று மூன்றான

பண்களும்பின் கல்யாணப் பாவையரா"

மனதால் எண்ணி மதிக்கப்படும் தோல்கருவி, துளைக்கருவி, கஞ்சக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி என்னும் ஐந்து இசைக்கருவிகளில் இருந்து தோன்றியது. நூற்று மூன்று பண்வகைகள் என்று தமிழ்விடுதூது மூலம் அறியமுடிகிறது (Thamizh Periyasamy, 2019).

"யாழும் குழலும் சீரும் மிடறும்"

சிலப்பதிகாரம் - மனை அறம் படுத்தகாதையில் யாழிசையும், குழலிசையும் தாள வயத்தோடு கூடிய வாய்ப்பாட்டை அறியமுடிகிறது (Manikkavasagar, 1998).

## யாழ்க்கருவி

சிலம்பில் நான்கு வகையான யாழ் கருவிகள் இடம் பெறுகின்றன. அவை பேரியாழ், செங்கோட்டியாழ், மகரயாழ், சகோட யாழ் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இசை மரபு - நரம்புக்கருவி உட்பிரிவு யாழ் வில்யாழ், நாரத யாழ், கீசக யாழ், ஆயிரப் பேரியாழ் முதலியனவும் இருந்தன என்பதை உணர்த்தும்.

பத்தர் என்பது வீணையின் குடம் போன்றதும் பச்சை அல்லது போர்வை குடத்தை மூடும் தோலெனவும், கோடு என்பது வீணையின் தண்டு போன்றது எனவும் தெரிகிறது. திவவு என்பது வீணைத் தண்டின் மேற்புறத்தில் நரம்புகள் இறுகக் கட்டப்பெற்று தளர்த்தவும், இறுக்கவும் சுருதி சேர்ப்பதற்கு வசதியாக அமைத்த பகுதி ஆகும் இவ்விசை.

## செங்கோட்டியாழ்

செந்நிறம் புரிந்த செங்கோட்டியாழ் என்பதற்கு அரும்பத உரையாசிரியர் பாடும் பாணர் அம்பணவர் செங்கோட்டியாழ் - அம்பணவர் யாழ்" என்று பொருள் கூறுகிறார். உழை முதற் கைக்கிளை இறுவாய்க் கிட்டி வரன்முறை வந்த மூவகைத் தானத்து என்பது மத்திமம் முதல் காந்தாரம் வரை நரம்புகளைச் சுருதி சேர்த்து மூவகைத்தானம் என்றால் இரண்டு ஏழ் கோகைகள் வர வேண்டியிருக்கும். சகோட யாழிற்கும் இந்த இலக்கணமே கூறப்படுகிறது. ஆகவே செங்கோட்டு யாழும் சகோட யாழும் ஈரேழ் கோவையாகிய பதினான்கு நரம்புகளை உடைய ஒரே மாதிரியான யாழ்க் கருவிகளாக இருக்கும் என்று தோன்றுகிறது. செங்கோட்டு யாழிற்கு ஏழு நரம்புகளே சூத்திரத்தில் சொல்லியிருக்கிறது.

## சகோடயாழ்

செங்கையாழ் என்னும் செங்கோட்டியாழ் அல்லது சகோட யாழை இசைத்த பெரும்பாணனாகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் கி.பி. ஆறாவது நூற்றாண்டில் நாளும் இன்னிசையில் தமிழ்ப்பரப்பிய திருஞானசம்பந்தர் காலத்தைச் சேர்ந்தவர். தொல்மரபாகிய யாழ்மரபும் பாணர் மரபும் தொடர்ந்து ஆறாவது நூற்றாண்டு வரை இருந்ததையும் மேலும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பெரிய புராணத்தை இயற்றிய சேக்கிழார் போற்றிப் பாடியுள்ளார்.

யாழ்க்கருவி மனித சமுதாயத்திலிருந்து மறைந்து ஆயிரம் ஆண்டுகளாகி விட்டதாக விபுலானந்தரின் யாழ், நூலுக்கு அணிந்துரை தந்துள்ள பெரும்புலவர் உமாமகேசுவரனார் கூறியுள்ளார். நூலாசிரியரான விபுலானந்தர் அதை உறுதிப்படுத்தியுள்ளார்.

வீணை என்பது தேவலோகத்து இசைக் கருவியாக இருக்கலாம். அதனாற்றான் நாரதன் வீணை என்றார் இளங்கோ. யாழ் என்பது பூலோகத்து இசைக்கருவி முன்னது வடசொல், பின்னது தூய தமிழ்ச்சொல்.

## குழல் கருவி (வங்கியம்)

யாழ்க்கருவி முல்லை நில மக்களிடம் அதிகமாக இருந்தன. கோவலர்கள் பசுக்களையும், கன்றுகளையும் மேய்க்கக் காட்டிற்கு ஓட்டிச் செல்வர். மாலைப் பொழுதில் கோவலர் குழலை எடுத்து முல்லைப்பண் இசைக்க, ஆனிரைகள் கோவலர்கள் வந்து சேரும். கோவலர்கள் அவைகளைத் தன் இருப்பிடங்களுக்கு ஓட்டிச் செல்வர்.

## யாழ் செய்வதற்கான மரங்கள்

1. மூங்கில், 2. சந்தனம், 3. வெண்கலம், 4. செங்காலி, 5. கருங்காலி இவைகளில் மூங்கிலாற் செய்வது சிறப்பு. வெண்கலத்தாணு செய்வது மத்திமம். மற்றவை அதமம் என்று கூறப்படுகிறது. நாதசுரம் புல்லாங்குழல் வகையைச் சேர்ந்தவையாகும்.

## இசையின் சிறப்பு

குழல் இசையோடு கூடி யாழிசையும், யாழ் இசைக்கு ஏற்ப, மத்தள ஒலியும் பொருந்தி வரும். மத்தள ஒலிக்கு ஈடு கொடுப்பது மேளம். மேளத்திற்கு ஏற்ப ஆமந்திரிகை எனும் இடக்கை வாத்தியம் இன்னிசையைக் கூட்டிடும். இடக்கை வாத்தியம் இசையோடு மற்ற வாத்தியங்களின் இசை சுதி பேதம் இன்றி ஒன்றாய்ப் பொருந்தி இருக்கும். இசை எழுப்ப ஒரு தாளத்திற்கு இரண்டு பற்றாகப் பஞ்ச தாளத்திற்கு பத்தும், தீர்மானம் ஒன்றும் ஆகப் பதினோரு பற்றியே கூத்தினை கூத்த நூல் கூறியுள்ளது. இக்கூத்தினை கற்று மாதவி திறம்பட ஆடினாள். அந்தரக் கொட்டு என்றும் முகாம் என்றும் கூறப்படும் கூத்தை நிகழ்த்தினாள்.

“குழல் வழி நின்றது யாழே, யாழ்வழித்

தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்

கட்டிய மண்டிலம் பதினொன்று”

சிலப்பதிகாரம், அரங்கேற்று காதை

என்ற வரிகள் மூலம் இசை வெள்ளத்தின் சிறப்புகளை அறியலாம் (Manikkavasagar, 1998).

சிலம்பில் ஆய்ச்சியர் குரவையில், ஆயர் மகளிர் கண்ணன் எப்போது தம் ஆயர் பாடிக்கு வருவான். வந்து தீங்குழல் ஊதித் தங்களை மகிழ்விப்பான் என்று ஏங்கிய நிலைமை உணர்த்துகின்றது சிலம்பு (Manikkavasagar, 1998).

கன்று குணிலாக் கனிஉதிர்த்த யாயவன்

இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்

கொன்றைஅம் தீங்குழல் கேளாமோ தோழீ”

“கொல்லை அம் சாரல் குருந்தொசித்த மாயவன்

எல்லைநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்

முல்லைஅம் தீங்குழல் கேளாமோ தோழி” (Manikkavasagar, 1998)

## முடிவுரை

இசை என்னும் சொல் இசைவிப்பது தன் வயப்படுத்துவது எனப் பொருள்படும். இது கல் மனத்தையும் கரைந்துருகச் செய்வது. பாமரமக்களும், படித்த மக்களும் இசையைக் கேட்டு இன்புறுவர். இசையைக் கேட்டு இன்புறாத உயிர்களே இல்லை என்று கூறலாம். விலங்குகள், பறவைகள், மரங்கள், செடிகள், கொடிகள் மற்றும் பாம்புகள் முதலிய உயிர்கள் இசையில் இன்பமடைகின்றன. இசை வாழ்க்கையில் இன்பத்தை அளிக்கும். நம் தமிழர்கள் இசைத்தமிழை முத்தமிழுள் நடுநாயகமாக வைத்துப் போற்றினர். யாழுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். சிலப்பதிகார காப்பியத்தில் யாழின் அமைப்பு, யாழ் வாசிக்கும் முறை, யாழின் வகை, யாழ் உருவாகும் முறை அனைத்தும் இடம்பெறுகின்றன இசைக்கருவிகள் பல இருந்தாலும் யாழ் வாசிக்கின்றவர்கள் மதி நுட்பத்தோடு இருத்தல் அவசியமானது. சிலப்பதிகாரத்தில் மாதவி யாழ் இசையைத் திறம்படக் கூற்று, யாழ் மீட்டினாள் என்பதனை இவ்வாய்வின் மூலம் தெரிந்துக் கொள்ளமுடிகிறது.

## References

Gowmarishwari, S. (2004) Thirukkural, Saradha Pathippagam, 5th Edition, Chennai, India.

Gowmarishwari, S. (2014) Tholkappiyam Porulathikaram, Saradha Pathippagam, 13th Edition, Chennai, India.

Manikkavasagar, N. (1998) Silappathikkaram, 2nd Edition, Uma Pathippagam, Chennai, India.

Thamizh Periyasamy, (2019) Thamizh Vidu Thoodu, Eight Edition, New Century Book house, Chennai, India.

Thandapani Durai, (2005) Manimekalai, Uma Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License